**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 10.5.2012**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகள் விளங்கும் வகையிலும், நாட்டின் சமூக – பொருளாதார வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளும் பங்கேற்கும் வகையில் சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்யும் வகையிலும், அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள், அதாவது கண் பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், வாய் பேசமுடியாதவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சிக் குன்றியவர்கள், கற்றலில் குறைபாடு, அதாவது Dyslexia, தசை சிதைவு Musculo distrophy, மூளை முடக்குவாதம் Cerebral Palsy, டௌன் குறைபாடுகள் Down Syndrome மற்றும் தற்புணை ஆழ்வு, அதாவது Autism உள்ள குழந்தைகளுக்கும், அவர்களின் இயலாத் தன்மையின் வகை, மற்றும் பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களை உள்ளடக்கிய கல்வி, அதாவது, Inclusive Education ஐ எனது அரசு வழங்கி வருகிறது.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் விடியல் பிறந்திட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இதற்காக, சுமார் 41 கோடி ரூபாய் செலவில் 4,010 சிறப்பு ஆசிரியர்கள், 17 வாழ்வியல் திறன் பயிற்சி நிபுணர்கள் மற்றும் 719 தன்னார்வலர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று, பாதிக்கப்பட்ட குழந்தைகளை கண்டறிய மாநிலம் முழுவதும் 601 மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடத்தப்பட்டதன் பேரில், 15,888 குழந்தைகள் கண்டறியப்பட்டு அக்குழந்தைகளுக்கு தேவையான உதவி உபகரணங்களும், 27 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை மூலம் உதவிகளும், 3 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், இக் குழந்தைகளுக்காக இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை விழா நடத்தப்பட்டன. மேலும், இக் குழந்தைகளின் வசதியை மனதிற் கொண்டு சாய்தள நடைபாதை வசதியும், மாற்றியமைக்கப்பட்ட கழிவறை வசதியும் 714 பள்ளிகளில் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இது போன்ற எண்ணற்ற திட்டங்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்காக மட்டுமல்லாமல், இக்குழந்தைகளின் தேவைகளை பெற்றோர்கள் அறிந்து கொள்ளும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக மாநில ஆதார வள மையம், State Resource Centre ஒன்று சென்னையில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மையத்தின் மூலம், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சுகாதாரத் துறையின் ஒருங்கிணைப்புடன் செயல்படும் சிறப்பு மருத்துவர்கள், வாழ்வியல் திறன் பயிற்சி வல்லுனர்கள், பேச்சு பயிற்சி வல்லுனர்கள் மற்றும் வெவ்வேறு குறைபாடுகளுக்கான ஆலோசகர்களின் தொழில் நுட்ப உதவிகளை மாற்றுத் திறன் கொண்டவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும்.

மேலும், அவர்களது குறைபாட்டின் தன்மையை முன்னதாக கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும், அதற்குத் தேவையான உபகரணங்களை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கவும்

இம்மையம் முன்னோடியாக விளங்கும். இது மட்டுமல்லாமல், அரசால் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள், உதவித் தொகைகள் மற்றும் தேவையான உதவிகளை பெறுவதற்கு இம்மையம் வழிவகை செய்யும்.

பல்வேறு குறைகளை அறியவும், அவற்றிற்கான சிகிச்சை மற்றும் ஆலோசனை பெறுவதற்குரிய மையங்களைப் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்வதற்காகவும், இம் மாநில ஆதார வள மையத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும். மேலும், இது குறித்து இந்தியாவில் இருக்கும் அனைத்து மையங்களின் விவரங்களை தொகுத்து ஒரு கையேடு வெளியிடப்படும். இச்சேவை பெற்றோர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

எல்லா குழந்தைகளையும் போல இக்குழந்தைகளும் புத்தகங்களை படித்து தங்களது திறனை வளர்த்து கொள்ள வேண்டும் என்ற எனது நோக்கத்தின் அடிப்படையில், இம்மையத்தில் குழந்தைகளுக்கென பயன்படும் வகையில் தனியாக ஒரு நூலகப் பிரிவு துவங்கப்படும்.

மேலும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, முதற்கட்டமாக கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனிப்பிரிவு தொடங்கப்படும். இது, பிற மாவட்ட நூலகங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இந்தியாவிலேயே முன்னோடியாக தமிழகத்தில் தொடங்கப்பட இருக்கும் இம் மாநில ஆதார வளமையம் மற்றும் அரசால் வழங்கப்படும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி, ஆகியவைகள் இக்குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களுடைய வாழ்க்கையை சிறப்புற அமைத்துக் கொள்ள வழிவகை செய்து கொடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*******